| S–5285 |
|---|

| Sub. Code |
|---|
| 22MTA1C4 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**First Semester**

தமிழ்

தொல்காப்பியம் - எழுத்ததிகாரம்

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

1. நூன்மரபு என்பதன் பெயர்க்காரணம் தருக.

2. எழுத்துகள் எந்நிலையில் அளவுகடந்து ஒலிக்கும்?

3. புணர்ச்சியில் ஆய்தம் எவ்வாறு அமையும் ?

4. ‘மிடற்றுப் பிறந்த வளியின் இசைப்பன’ யாவை?

5. மருஉச் சொல் என்றால் என்ன? உதாரணம் தருக.

6. கலம் + குறை = புணர்ச்சி விதி தருக.

7. அழன், புலன் எனும் னகரவீற்றுச் சொற்கள் பெறும் சாரியைகள் யாவை?

8. ஆகரச் சுட்டு மெல்லினத்தோடு எவ்வாறு புணரும்? சான்று தருக.

9. ஆண்மரக்கிளவி அரைமர இயற்றே விளக்குக.

10. வண்டும் பெண்டும் பெறும் சாரியையைக் குறிப்பிடுக.

**பகுதி ஆ** (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

11. (அ) சிறப்புப் பாயிரம் சுட்டும் பாயிர உறுப்புகளைத் தருக.

(அல்லது)

(ஆ) எழுத்துக்களின் வடிவம் பற்றி எழுதுக.

12. (அ) மூவகை மொழிகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) எழுத்துக்களின் பொதுப்பிறப்பினைக் குறிப்பிடுக.

13. (அ) எழுத்துச் சாரியை குறித்து தொல்காப்பியர் குறிப்பிடுவன யாவை?

(அல்லது)

(ஆ) ஐகார வேற்றுமை பெறும் திரிபுகளை எழுதுக.

14. (அ) மகர ஈற்றுச் சொற்கள் புணர்ச்சியில் பெறும் சாரியைகளைத் தருக.

(அல்லது)

(ஆ) அகார ஈற்றுப் பெயர்கள் வேற்றுமையில் புணருமாற்றை விளக்குக.

15. (அ) தேன் என்னும் கிளவி எவ்வாறு புணரும்? விளக்குக.

(அல்லது)

(ஆ) குற்றியலுகரம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

**பகுதி இ** (3 × 10 = 30)

ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விரிவான விடையளி.

16. மெய்ம்மயக்கம் குறித்தத் தொல்காப்பியச் சொற்களை விவரிக்க.

17. மொழிக்கு இறுதியாகும் எழுத்துக்களைக் கட்டுரைக்க.

18. உயிரீறு, மெய்யீறுகளின் பொதுப் புணர்ச்சியைத் தொகுத்துரைக்க.

19. இகர ஈற்றுப் புணர்ச்சியை விவரித்தெழுதுக.

20. எண்ணுப் பெயர்களோடு அளவு, நிறைப் பெயர்களின் புணர்ச்சியைக் கட்டுரைக்க.

---

**S–5286**

| Sub. Code |
|---|
| **22MTA2C1** |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**Second Semester**

**தமிழ்**

**காப்பிய இலக்கியம்**

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

1. மங்கல வாழ்த்துக் காதையில் போற்றப்படும் இயற்கைச் சக்திகள் யாவை?

2. மணிமேகலைக்குச் சுதமதி கூறிய அறிவுரை யாது?

3. விமலையார் பந்தாடும் காட்சியைக் காட்சிப்படுத்துக.

4. பெருங்கதை - குறிப்பு வரைக.

5. பரத்துவாச முனிவர் பரதனுக்கு வழங்கிய ஆசி யாது?

6. சேக்கிழார் - குறிப்பு வரைக.

7. திருவிளையாடற்புராணம் - குறிப்புரைக்க.

8. சல்லியன் - குறிப்பு வரைக.

9. வளன் - குறிப்புரைக்க.

10. மக்கா நகரில் முழங்கும் ஓசைகளைக் குறிப்பிடுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

11. (அ) கோவலன் - மாதவி உரையாடலைக் கானல்வரி வழி நின்று விளக்குக.

(அல்லது)

(ஆ) ஐவேறு வனங்கள் குறித்து விளக்குக.

12. (அ) ஏமாங்கத நாட்டின் மருதநில வளம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) உதயணன் பாத்திரம் மூலம் அறியலாகும் நட்பின் சிறப்பைத் தொகுத்துரைக்க.

13. (அ) பரதன், இலக்குவன், இராமன் மூவரின் உறவைக் கம்பரின் வழிநின்று விளக்குக.

(அல்லது)

(ஆ) "பொருபுலிப் பார்வைப் பேழ்வாய்

முழைஎனப் பொன்கை நீட்ட" - விளக்குக.

14. (அ) பதினாறாம் நாள் போர் சிறப்பினை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) தாவீதின் சூழுரையை விளக்குக.

15. (அ) மானுக்குப் பிணை நின்ற படலத்தின் இலக்கியச் சிறப்புகளைக் கூறி விளக்குக.

(அல்லது)

(ஆ) உமறுப்புலவரின் அரிய தமிழ்ப் பணிகளைச் சுட்டி உரைக்க.

**பகுதி இ** $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு மட்டும் விரிவான விடையளிக்க.

16. சிலப்பதிகாரம் முத்தமிழ்க் காப்பியம் - எனும் கூற்றை ஆய்க.

17. விமலையாரின் அழகு நலன்களைக் கட்டுரைக்க.

18. கண்ணப்பரின் பக்திச் சிறப்பினைப் புலப்படுத்துக.

19. கன்ன பருவத்தின் போர்க்காட்சிகளைத் தொகுத்துரைக்க.

20. நபி பட்டம் பெற்ற வரலாற்றை எடுத்தியம்புக.

———————

**S–5287**

| Sub. Code |
| --- |
| 22MTA2E3 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**Second Semester**

**தமிழ்**

**விருப்பப்பாடம் - உரையாசிரியர்கள்**

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours　　　　　　　　Maximum : 75 Marks

**பகுதி அ**　　　　　$(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

1. நன்னூல் “விருத்தியுரை” என்பதற்குக் கூறும் இலக்கணம் யாது?

2. பரிமேலழகளின் உரைக்கு விளக்கமாக எழுந்த நூல் எது? யார் இயற்றியது?

3. ‘சத்துவம்’ என்பதற்குத் தண்டியலங்கார உரை கூறும் விளக்கம் யாது?

4. நன்னூலுக்கு முதன்முதலில் உரையெழுதியவர் யார்?

5. வைணவ உரையாசிரியர்கள் தாம் எழுதிய விளக்கவுரையை எவ்வாறு குறிப்பிட்டனர்?

6. அகநானூற்றுக்குப் பழையவுரை எழுதியவர் யார்?

7. தொகுப்புரை - விளக்கம் தருக.

8. மீட்டுருவாக்கம் என்றால் என்ன?

9. ‘வனப்பு’ என்பதற்குப் பேராசிரியர் தரும் விளக்கம் யாது?

10. பரிமேலழகர் ‘மானம்’ என்பதற்குக் கூறும் விளக்கம் என்ன?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

11. (அ) இலக்கிய உரைகளின் உள் வகைகளைத் தெளிவுறுத்துக.

(அல்லது)

(ஆ) செய்யுள் வடிவில் தோன்றிய உரை நூல்களை எடுத்துரைக்க.

12. (அ) எழுத்திலக்கண உரைகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) தொல்காப்பிய உரைக் கூறுகளைக் குறிப்பிடுக.

13. (அ) நாலடியாருக்குக் காலந்தோறும் எழுந்த உரைகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பரிமேலழகரின் பல்கலைப் புலமையினைத் திருக்குறள் உரைவழி எடுத்துக்காட்டுக.

14. (அ) மொழியுரை அமைப்புப் பற்றிய ஆய்வுகளைக் கூறுக.

(அல்லது)

(ஆ) உரைவழிச் சமூகக் கருத்துகள் வெளிப்படுமாற்றை எழுதுக.

15. (அ) நக்கீரரின் புலமைத் திறனை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) சேனாவரையரின் இலக்கணப் புலமையினைத் தெளிவுறுத்துக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. உரையால் விளையும் பயன்களை எடுத்துரைக்க.

17. நன்னூலுக்கு உரையெழுதிய சங்கர நமச்சிவாயரின் உரைத்திறனைப் புலப்படுத்துக.

18. அடியார்க்கு நல்லாரின் உரைச் சிறப்பினை விளக்குக.

19. இலக்கிய வகைமை ஆய்வு வரலாறு குறித்து எழுதுக.

20. நச்சினார்க்கினியரின் உரைத்திறனை ஆராய்க.

———————

**S–5289**

| Sub. Code |
|---|
| 22MTA3C1 |

## M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024

### Third Semester

### தமிழ்

### சங்க இலக்கியம்

### (CBCS – 2022 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. ‘பழகிய பகையும் பிரிவு இன்னாதே’ எனத் தோழி கடிவது ஏன்?

2. தலைவன் பாங்கனிடம் தன் நற்குணங்கள் பறிபோகக் காரணமெனக் கூறியது யாது?

3. ‘உண்ணு நீர் விக்கினான்’ - நகைத்திறத்தை இயம்புக.

4. ‘பண்பு’ எனப்படுவது யாது?

5. பதிற்றுப்பத்து - குறிப்பு வரைக.

6. ‘வணிகன் ஆய்அலன்’ - இத்தொடரினை விளக்குக.

7. கடியலூர் உருத்திரங் கண்ணனார் குறிப்பு தருக.

8. மாங்குடி மருதனார் குறித்தெழுதுக.

9. மதுரைக்காஞ்சி குறிப்பிடும் ‘கோசர்’ யார்?

10. ‘உழிஞை சூடிப் பேய்க்கன் அன்ன’ என்ற உவமை குறிப்பிடும் மன்னன் யார்?

பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

11. (அ) மகட்போக்கிய வழி தாய் இரங்கும் செய்தியினை ஐங்குறுநூறு எங்ஙனம் புலப்படுத்துகிறது?

(அல்லது)

(ஆ) "இளமையின் சிறந்த வளமையும் இல்லை" எனத் தலைவன் தன் நெஞ்சிடம் உரைத்தப் பாங்கினை எடுத்துரைக்க.

12. (அ) அகநானூற்று நெய்தல் திணைப்பாடல்களில் கருப்பொருள் அமைந்த திறத்தைத் திறனாய்க.

(அல்லது)

(ஆ) வரைவு கடாதலில் தோழியின் நிலைப்பாட்டினைக் கலித்தொகை வழி விவரிக்க.

13. (அ) "உண்மின் கள்ளே! அடுமின் சோறே!" என உணவு சமைத்த விறலியர் திறத்தை விளக்குக.

(அல்லது)

(ஆ) 'பரிசில் கடாநிலையில்' புலவரின் மனநிலையைப் புலப்படுத்துக.

14. (அ) மகளிர் வாழ்க்கைமுறையை மதுரைக்காஞ்சி எவ்வாறு காட்சிப்படுத்துகிறது?

(அல்லது)

(ஆ) மாங்குடி மருதனார் வர்ணிக்கும் மருத நில வளத்தினை விளக்கியுரைக்க.

15. (அ) காவிரிப்பூம்பட்டினத்துப் பகற்காலக் காட்சியை விளக்குக.

(அல்லது)

(ஆ) வணிக வீதியின் செயல்பாடுகள் குறித்துப் பட்டினப்பாலை கூறும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** கட்டுரை வடிவில் விடை தருக.

16. தோழியின் ஆளுமைத்திறத்தை நற்றிணைப் பாடல்கள் வழி எடுத்துரைக்க.

17. வையை மக்கள் புனலாடி மகிழ்ந்த விதத்தினை விவரி.

18. சேரனின் வெற்றிச் சிறப்புகளைப் பதிற்றுப்பத்து வழி ஆராய்க.

19. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனின் போர்த்திறத்தைத் தொகுத்துரைக்க.

20. காவிரிப்பூம்பட்டினம் குறித்துப் பட்டினப்பாலை வழியாக அறியலாகும் செய்திகளை நிரல்படுத்துக.

———————

| S–5290 |
|---|

| Sub. Code |
|---|
| 22MTA3C3 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**Third Semester**

**தமிழ்**

**ஆராய்ச்சி நெறிமுறைகள்**

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours                                        Maximum : 75 Marks

**பகுதி அ**                    $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. ‘ஆய்வு’ வரையறை செய்க.

2. கருதுகோள் என்றால் என்ன?

3. ஆய்வேட்டிற்கு அழகு தருவனவற்றை எழுதுக.

4. தலைப்புத் தேர்வு குறித்து எழுதுக.

5. ஆய்வு நெறித்திட்டம் ———————— விளக்கம் தருக.

6. அறிவியல் முறை ஆய்வின் உள்ளடக்கத்தைக் கூறுக.

7. தகவல் களங்கள் எவை?

8. முன்னுரை - முடிவுரை வேறுபாடு தருக.

9. வரலாற்றுத் தரவுகளின் வாயில்களைக் கூறுக.

10. இலக்கண ஆய்வு - வரையறுக்க.

**பகுதி ஆ** (5 × 5 = 25)

**அனைத்து** விடைக்களுக்கும் விடையளிக்கவும்.

11. (அ) ஆய்வு அணுகுமுறைகள் குறித்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) ஆய்வில் எழும் சிக்கல்களைப் பட்டியலிடுக.

12. (அ) ஆய்வின் அடிப்படைப் பண்புகளைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) ஆய்வுப் பொருளைத் தெளிவாகச் சுட்டும் விதம் பற்றி எழுதுக.

13. (அ) ஆய்வின் வகைப்பாடு குறித்துக் கருத்துரைக்க.

(அல்லது)

(ஆ) அறிவியல் ஆய்வுக் கோட்பாடுகளை வகைப்படுத்துக.

14. (அ) அடிக்குறிப்பில் எழும் சிக்கல்களையும் தீர்வுகளையும் நிரல்படுத்துக.

(அல்லது)

(ஆ) ஆய்வுரையில் படங்களின் பங்கினை மதிப்பிடுக.

15. (அ) ஒப்பிலக்கிய ஆய்வு குறித்த கருத்துக்களை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) தமிழியலும் மொழியியலும் குறித்த சிந்தனைகளைத் தெளிவுபடுத்துக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.

16. ஆய்வாளர்க்குரிய தகுதிகளை விளக்கியுரைக்க.

17. ஆய்வுப் பொருள் பற்றி இதுவரை செய்யப்பட்ட ஆய்வுகளின் தனித்தன்மைகளை எடுத்தியம்புக.

18. ஆய்வுலக அடிப்படைக் கோட்பாடுகளை அடையாளப்படுத்துக.

19. ஆய்வேட்டின் அமைப்பும் வரைவு முறையும் குறித்துக் கருத்துரை வரைக.

20. தமிழியல் ஆராய்ச்சியின் தோற்றம், வளர்ச்சி குறித்துக் கட்டுரைக்க.

---

| S–5291 |
|---|

| Sub. Code |
|---|
| 22MTA3C4 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**Third Semester**

தமிழ்

அயலகத் தமிழ் இலக்கியம்

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. ‘விடுதலைப்பொழுது’ எனும் கவிதையின் உட்பொருளை சுருக்கமாகக் கூறுக.

2. வ. ச. ஜெயபாலனின் படைப்புகளை எழுதுக.

3. இழப்புகள் எனும் சிறுகளையின் முதன்மைக் கதை மாந்தரைக் குறிப்பிடுக.

4. எஸ். பொ எனும் நூலாசிரியர் எந்நிலப்பரப்பைச் சார்ந்தவர்?

5. தமிழில் தோன்றிய முதல் இரு நாவல்களை எழுதுக.

6. தமிழ்ச் சிறுகதையின் தந்தை யார்? முதற்சிறுகதை எது?

7. பா. ஆனந்தகுமார் எழுதிய அயலகக் கட்டுரைத் தொகுப்பினைக் குறிப்பிடுக.

8. சிங்கப்பூர் தமிழ் இலக்கியத்தின் நூலாசிரியரைக் குறிப்பிடுக.

9. புலம்பெயர்ந்தோர் வாழ்வியலைக் காட்டும் இருபடைப்பைச் சுட்டுக.

10. புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் எனும் நூலின் ஆசிரியரைக் குறித்து ஓரிரு வரிகளில் எழுதுக.

**பகுதி ஆ** $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்

11. (அ) காசி ஆனந்தன் கவிதை வெறிப்படுத்தும் பொருண்மையை விளக்குக.

(அல்லது)

(ஆ) 'விரல்கள் விழித்திருக்கட்டும்' எனும் படைப்பு உணர்த்தும் செய்தி யாது?

12. (அ) இராம. கண்ணபிரானின் வேறு சில படைப்புகளை எடுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) 'பருத்திப்பூ' சிறுகதையில் வரும் கதைமாந்தர்களைக் குறிப்பிடுக.

13. (அ) ரீயூனியன் தமிழரின் மொழி மற்றும் பண்பாட்டுச் சிதைவும் – தக்கவைப்பும் – உணர்த்தும் செய்திகளை சுருக்கமாக எழுதுக.

(அல்லது)

(ஆ) புலம்பெயர்ந்தோர் கவிதைகள் காலமும் வெளியும் – எனும் கட்டுரை வெளிப்படுத்தும் கருத்து யாது?

14. (அ) கனடாவில் தமிழ் இலக்கியம் எவ்வாறு போற்றப்படுகிறது?

(அல்லது)

(ஆ) ஆசிரியர் செல்வக்குமார் கூறும் ஈழத்தமிழர்களின் புலம்பெயர்வு குறித்து எழுதுக.

15. (அ) சிங்கப்பூர்க்கவிதைகள் கொண்டு தமிழ் இலக்கியத்தின் சிறப்பை எடுத்துக்கூறுக.

(அல்லது)

(ஆ) "ஈழத்துக்கவிதை மரபுகள்" வெளிப்படுத்தும் செய்தியைச் சுருக்கி வரைக.

**பகுதி இ** $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடை தருக.

16. மலையகத் தேசத்தில் தமிழ்ப்புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து விவரி.

17. வரலாற்றுப் பதிவில் மலேசியத் தமிழர்கள் – விவரி.

18. அ. முத்துலிங்கம் கூறும் சிறுகதையைத் தொகுத்துரைக்க.

19. "விவசாயியின்" வாழ்வியலை இறைமதியழகன் படைப்புவழி தெளிவுறுத்துக.

20. தமிழ்ப்புதினத்தின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்துக் கட்டுரை எழுதுக.

---

| S–5292 |
|---|

| Sub. Code |
|---|
| 22MTA3E1 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**Third Semester**

தமிழ்

விருப்பப்பாடம் - திறனாய்வுக் கோட்பாடுகள்

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. திறனாய்வு நூல்கள் யாவை?
2. சி.சு செல்லப்பாவின் திறனாய்வுப் பணிகளைக் கூறுக.
3. அழகியல் வரையறுக்க.
4. படிமவியல் கோட்பாடுகள் இரண்டினை எழுதுக.
5. வரலாற்றியல் கூறுகளைக் கண்டறிக.
6. சூழலியல் - வரையறை செய்க.
7. உளவியல் அறிஞர்களின் பெயர்களைச் சுட்டுக.
8. பின் அமைப்பியல் என்றால் என்ன?
9. பெண்ணியம் பொருள் தருக.
10. தலித்துகள் குறித்து அம்பேத்காரின் கருத்து யாது?

## பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

11. (அ) தெ.பொ.மீ வழிவருபவர்களின் திறனாய்வுப் பணிகளை மதிப்பிடுக.

(அல்லது)

(ஆ) க.பஞ்சாங்கம் கூறும் திறனாய்வுக் கோட்பாடுகளைப் பட்டியலிடுக.

12. (அ) அழகியல் திறனாய்வைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) நடப்பியலின் தோற்றம் குறித்து விவரிக்க.

13. (அ) இலக்கியத்தில் காணலாகும் மானிடவியல் கருத்துக்களைத் திறனாய்க.

(அல்லது)

(ஆ) அறிவியல் திறனாய்விற்குத் துணைநிற்கும் அடிப்படைகளைக் கண்டறிக.

14. (அ) அமைப்பியல் அணுகுமுறையில் இலக்கியத்தைத் திறனாய்வு செய்யும் விதத்தைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) உளவியல் திறனாய்வுக் கோட்பாடுகளைச் சுட்டுக.

15. (அ) தலித் இலக்கியத் திறனாய்வின் தனித்தன்மைகளை அடையாளப்படுத்துக.

(அல்லது)

(ஆ) நவீனத்துவம்-பின் நவீனத்துவம் வேறுபடுத்துக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடைதருக.

16. திறனாய்வு செய்யும்முன் திறனாய்வாளன் கவனிக்க வேண்டியனவற்றைத் தொகுத்துரைக்க.

17. குறியீட்டியல் தத்துவம் குறித்த செய்திகளை வரிசைப்படுத்துக.

18. 'இலக்கியத்திற்கும் சமூகத்திற்கும் இடையே உள்ள உறவை அடிப்படையாகக் கொண்டது சமூகவியல் திறனாய்வு' - "எனும் கூற்றை மெய்ப்பிக்க.

19. உளவியல் திறனாய்வில் செய்ய வேண்டிய பகுப்புகளை அடையாளப்படுத்துக.

20. 'தமிழ் இலக்கியத் திறனாய்வு காலத்திற்கேற்ப தன்னைப் புதுப்பித்துக் கொண்டே வருகிறது' - எனும் கூற்றைச் சான்றுடன் நிறுவுக.

———————

| S–5294 |
|---|

| Sub. Code |
|---|
| 22MTA4C1 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**Fourth Semester**

**தமிழ்**

**தொல்காப்பியம் பொருளதிகாரம் - பின் நான்கு இயல்கள்**

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours    Maximum : 75 Marks

**பகுதி அ**    $(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

1. மதிமை சாலா மருட்கை நான்கே - பொருள் கூறுக.

2. முறையுறக் கிளந்த ஒப்பினது வகையைக் கூறுக.

3. கிழக்கிடு பொருளோடு ஐந்துமாகும் - விளக்குக.

4. இரட்டைக் கிளவியும் இரட்டை வழித்தே - விளக்குக.

5. ஆசையின் வகைகளைச் சுட்டுக.

6. சூத்திரத்திற்குரிய இலக்கணத்தைத் தருக.

7. குளவில் கூற்றுக்குரியோரைச் சுட்டுக.

8. முன்னம் என்பது யாது?

9. கவரியும் கராமும் நிகரவற்றுள்ளே – பொருள் தருக.

10. அரசர்க்குரிய மரபுகளாக மரபியல் கூறுவன யாவை?

## பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

11. (அ) அவையும் உளவே அவையலங்கடையே என்னும் நூற்பா உரைக்கும் செய்திகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) சிறந்த பத்தும் செப்பிய பொருளே – விளக்கியுரைக்க.

12. (அ) உவமையின் வகைகள் அவற்றின் நிலைக்களன்கள் பற்றியுரைக்க.

(அல்லது)

(ஆ) உவமைப்போலி ஐந்தென மொழிப – விளக்குக.

13. (அ) யாப்பு குறித்து செய்யுளில் கூறுவன யாவை?

(அல்லது)

(ஆ) பா அவற்றின் வகை குறித்து விளக்குக.

14. (அ) களவிற்குரிய இலக்கணம் குறித்து உரைக்க.

(அல்லது)

(ஆ) கூற்றிற்கு உரிமையில்லா மாந்தர்கள் பற்றி விளக்குக.

15. (அ) கடியலாகா கடன் அறிந்தோர்க்கே – விளக்குக.

(அல்லது)

(ஆ) புல், மரவகை உறுப்புகள் பற்றி உரைக்க.

## பகுதி இ (3 × 10 = 30)

ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விரிவான விடையளி.

16. பெருந்திணைக்குரிய மெய்ப்பாடுகளைச் சான்றுடன் விளக்குக.

17. அகமாந்தர்கள் உவமை கூறும் முறையை எடுத்துரைக்க.

18. வாயுறை வாழ்த்து அவைறூயடக்கியல், செவியறிவுறாஉ ஆகியவை பாடப்பெறும் முறை பற்றியுரைக்க.

19. வண்ணங்கள் குறித்து ஒரு கட்டுரை எழுதுக.

20. மரபியல் கூறும் பெண்பால் பெயர்கள் குறித்துக் கட்டுரைக்க.

| S–5295 |
|---|

| Sub. Code |
|---|
| 22MTA4C2 |

**M.A. DEGREE EXAMINATION, NOVEMBER 2024**

**Fourth Semester**

**தமிழ்**

**நாட்டுப்புற இலக்கியங்களும் கோட்பாடுகளும்**

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

1. நாட்டுப்புறப் பாடல் என்றால் என்ன? சான்று தருக.
2. வீட்டிற்குள்ளே விளையாடும் விளையாட்டுக்கள் எவை?
3. தொன்மைக் கதைகள் - பொருள் தருக.
4. கதைக் கூறுகள் - பொருள் தருக.
5. 'கொலைச் சிந்துப் பாடல்' களின் அடிப்படைப் பண்புகளை எழுதுக.
6. 'கான் சாகிபு சண்டை' என்ன வகைப்பாடலாகக் குறிப்பிடப்படுகிறது?
7. 'பிறந்தது முதல் வயிற்றாலே போகிறது' – அது என்ன?
8. விடுகதைகள் எவ்வெச் சூழல்களில் நிகழ்த்தப் பெறுகின்றன?
9. 'லெவிஸ்ட்ராஸ்' பின்பற்றிய ஆய்வுக் கோட்பாடு முறை யாது?
10. 'உளவியலின் தந்தை' என்று அழைக்கப் பெறுபவர் யார்?

## பகுதி ஆ  $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்க.

11. (அ) 'கரகாட்டம்' நிகழ்த்தப்படும் சூழல்களைப் பட்டியலிடுக.

(அல்லது)

(ஆ) 'விளையாட்டுப் பாடல்' களின் தனித்துவங்களை எழுதுக.

12. (அ) நீங்கள் அறிந்த 'பழமைக்கதைகளில்' ஒன்றை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) 'விலங்குக்கதைகள்' என்பவை யாவை? சான்று காட்டுக.

13. (அ) 'ஐவர் ராசாக்கள் கதை' யின் மையப் பொருளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) 'கட்டபொம்மன் கதை'ப் பாடலின் பின்னணியை எழுதுக.

14. (அ) 'குறுந்தகவல்கள்' நாட்டுப்புறவியலில் பெறும் இடத்தை விளக்குக.

(அல்லது)

(ஆ) உமக்குத் தெரிந்த ஐந்து பழமொழிகளைத் தேர்ந்து அவற்றின் பொருளை விளக்குக.

15. (அ) 'சூழலியல் கோட்பாட்டின்' அடிப்படைகளைப் பகர்க.

(அல்லது)

(ஆ) 'சின்னணண்ணன் சின்னச்சாமி' கதைப்பாடலின் 'நிலவியல்' பின்புலத்தை எழுதுக.

**பகுதி இ** $(3 \times 10 = 30)$

ஏதேனும் **மூன்று** வினாக்களுக்கு விரிவான விடையளி.

16. நாட்டுப்புறப் பாடல்களின் வகைகளைச் சான்றுடன் விவரிக்க.

17. நாட்டுப்புறக் கதைகளின் வரையறை, வகைகள், பயன்பாடுகள் குறித்துக் கட்டுரைக்க.

18. கதைப்பாடல்களின் பொதுத்தன்மைகளை விளக்கி அதில் வரலாற்றுக் கதைப் பாடல்களின் தனித்துவங்களை எடுத்துரைக்க.

19. நாட்டுப்புறவியலில் 'விடுகதைகள்' பெறும் இடத்தை உதாரணங்களுடன் விவாதிக்க.

20. அமைப்பியல் கோட்பாட்டை விளக்கி வரைக.

---